# செழிப்பான வருமானம் தரும் செடிமுருங்கை!.

## 25.10.2013



அடித்து வளர்க்காதப் பிள்ளையும், ஒடித்து வளர்க்காத முருங்கையும் பயனில்லாமல் போய் விடும் என்பது விவசாயிகள் மத்தியில் சொல்லப்படும் சொலவடை. முருங்கை மரம், உயரமாக வளர்ந்தால், அதில் ஏறி காய் பறிக்க முடியாது. தவிர, முருங்கை மரம் லேசானது என்பதால் ஆட்கள் ஏறினால், எடை தாங்காமல் உடைந்து விடும் என்பதால்தான் அப்படிச் சொல்லி வைத்தார்கள். இன்றோ, ஒடித்து வளர்க்க அவசியமில்லாத செடிமுருங்கைகள், விவசாயிகள் மத்தியில் வெகுவாக செல்வாக்கு பெற்று வருகின்றன. அதிக செலவில்லாமல் நல்ல வருமானம் எடுக்க முடியும் என்பதும் இன்னொரு முக்கிய காரணம்! குறைந்த பரப்பில் செடிமுருங்கையைப் பயிரிட்டு. நல்ல வருமானத்தை எடுத்து வருகிறார், சேலம் மாவட்டம், ராமநாயக்கன் பாளையம் கிராமத்தைச் சேர்ந்த பொன்னுசாமி. இவர். இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் அங்கமான தமிழ்நாடு விவசாய சங்கத்தின் மாநிலக்குழு உறுப்பினராக இருக்கிறார். நான் நான்காவது வரைக்கும் படித்தேன். அதற்குமேல் படிக்க வசதியில்லை. அதனால் அப்பா கூட சேர்ந்து விவசாயத்தில் இறங்கிவிட்டேன். எங்க ஊருக்குப் பக்கத்தில் இருக்கும் மலையருவியில் இருந்து வந்த தண்ணீரை வைத்து சம்பா பட்டத்தில் ஒரு போகம் நெல் போடுவோம். மற்ற சமயங்களில் கிடைக்கும் மழையைப் பொருத்து, கம்பு, சோளம் என்று போடுவோம். போகப் போக ஆற்றில் தண்ணீர் குறைந்துவிட்டது. அதனால், கமலை ஏற்றம், மோட்டார் என்று பாசனம் செய்ய ஆரம்பித்தோம். அந்த சமயத்தில் ‘சேகோ’ கம்பெனிக்காரங்க மரவள்ளி சாகுபடி செய்யச் சொன்னாங்க. அதில், பூச்சித்தாக்குதல் அதிகமாக இருந்தாலும், ஆரம்பத்தில் விளைச்சல் அதிகமாக கிடைத்தது. போக போக, மகசூல் குறைய ஆரம்பித்ததுடன், கட்டுபடியான விலையும் கிடைக்கவில்லை. அதன் பிறகு, ஆத்தூர், தலைவாசல் பக்கத்திலேயே சந்தை இருந்ததால். காய்கறி விவசாயத்திற்கு மாறினேன். கத்திரி, வெண்டை பீர்க்கன் என்று பலவிதமான காய்கறிகளை சாகுபடி செய்ததில், நல்ல லாபம் கிடைக்க ஆரம்பித்தது என்றார் பொன்னுசாமி.

வழிகாட்டிய தோழர் ஒரு கட்டத்தில் பாகப் பிரிவினை செய்ததில் எனக்கு இரண்டு ஏக்கர் நிலம் வந்தது. செடி முருங்கைக்குக் குறைந்த தண்ணீர் போதும் என்று, ஒருத்தர் சொன்னதால், செடிமுருங்கை சாகுபடிக்கு மாறினேன். இப்போது நான்கு வருடமாக, 30 சென்டில் செடி முருங்கை, 70 சென்டில் மஞ்சள், ஒரு ஏக்கரில் நெல் என்று சாகுபடி செய்து கொண்டிருக்கிறேன். மஞ்சளுக்கு ஊடுபயிராக செடிமுருங்கை போட்டால்…

மகசூல் நன்றாக இருக்கிறது. செடி முருங்கையில் நான்கு வருடம் வரைக்கும் மகசூல் கிடைக்கும். ஆனாலும், நான் ஒரு வருடம்தான் வைத்திருப்பேன்.

ஒரு முறை, சிவகங்கை தொகுதி எம்.எல்.ஏ-வான குணசேகரன் (கம்யூனிஸ்ட்), பசுமை விகடன் படித்து கொண்டிருந்தார். அதில் வெளியாகியிருந்த சில விஷயங்களை மாநிலக் குழுக்கூட்டத்திலும் பேசினார். அதிலிருந்து 'பசுமை விகடன் புத்தகத்தை வாங்கிப் படிக்க ஆரம்பித்தேன். அதில் வெளியாகும் இயற்கை விவசாய முறைகளைப் பயன்படுத்த ஆரம்பித்ததும் செலவு குறைந்தது. மகசூலும், வருமானமும் அதிகமானது என்றார் பொன்னுசாமி. செடிமுருங்கை சாகுபடி செய்யும் விதத்தைச் சொல்ல ஆரம்பித்தார் வைகாசிப் பட்டம் களர் மற்றும் உவர் நிலங்களைத் தவிர்த்து, வடிகால் வசதியுள்ள அனைத்து நிலங்களிலும் செடிமுருங்கை நன்றாக வளரும். இதற்கு வைகாசிப் பட்டம் ஏற்றது. இதன் ஆயுள் காலம் நான்கு ஆண்டுகள். தனிப்பயிராகவோ... ஊடுபயிராகவோ சாகுபடி செய்யலாம். தனியாக நடவு செய்வதாக இருந்தால், நிலத்தை நன்றாக உழவு செய்து கொள்ள வேண்டும். 10 அடிக்கு 10 அடி இடைவெளியில் நடவு செய்ய வேண்டும். நடவு செய்வதற்காக குறித்த இடத்தில் ஓர் அடி இடைவெளியில் மூன்று துளைகள் இட்டு, துளைக்கு ஒரு விதை வீதம் நடவு செய்ய வேண்டும். இதில் ஒன்று பழுதானாலும், மற்றவை பிழைத்துக் கொள்ளும். மண்ணின் ஈரப்பதத்தைப் பொருத்து, தொடர்ந்து தண்ணீர் பாய்ச்ச வேண்டும். 8-ம் நாள் முதல் 10-ம் நாளுக்குள் முளைத்து வந்துவிடும். ஊடுபயிராக செய்வதாக இருந்தால், மஞ்சள் நடவு செய்த மூன்றாம் மாதத்தில் களை எடுத்த பிறகு, 10 அடி இடைவெளியில் செடிமுருங்கையை விதைக்க வேண்டும். தனியாக உரம் வைக்கத் தேவையில்லை. முதன்மைப் பயிருக்கு இடும் உரமே போதுமானது. தனிப்பயிராக சாகுபடி செய்யும் போது, ஒன்றரை மாதங்களுக்கு ஒரு முறை களை எடுக்க வேண்டும். 6-ம் மாதத்தில் மண் அணைக்க வேண்டும். 45-ம் நாளில் ஒரு செடிக்கு ஒரு கிலோ மண்புழு உரத்துடன் 100 கிராம் வேப்பம் பிண்ணாக்கும், 90-ம் நாளில் ஒரு செடிக்கு ஒரு மண்புழு உரத்துடன் 200 கிராம் வேப்பம் பிண்ணாக்கும், 130-ம் நாளில் ஒரு கிலோ மண்புழு உரத்துடன் 400 கிராம் வேப்பம் பிண்ணாக்கும் கலந்து வைக்க வேண்டும். 30-ம் நாளில் இருந்து 15 நாட்களுக்கு ஒரு முறை டேங்குக்கு (10 லிட்டர் ) 300 மில்லி வீதம் பஞ்சகவ்யாவைக் கலந்து தெளிக்க வேண்டும். பூச்சித் தாக்குதல் தென்பட்டால், டேங்குக்கு 1 லிட்டர் வீதம் மூலிகைப் பூச்சிவிரட்டியைக் கலந்து தெளிக்கலாம். 50 லிட்டர் அமுதக்கரைசல், 50 லிட்டர் ஜீவாமிர்தக்கரைசல் ஆகியவற்றை மாதம் ஒரு முறை சுழற்சி முறையில் பாசனத் தண்ணீரில் கலந்து விட வேண்டும்.

### கொழுந்து கிள்ளல் அவசியம்!

3 முதல் 4 மாதங்களில் மூன்று அடி உயரம், 4 முதல் 5 மாதங்களில் ஐந்து அடி உயரம், 5 முதல் 6 மாதங்களில் ஏழு அடி உயரம் என வளர்ந்துவரும். இந்தக் கலகட்டங்களில் முருங்கைச் செடிகளில் உள்ள ' கொழுந்து பகுதியைக் கிள்ளிவிட வேண்டும். அதற்குமேல், அதிக சிம்புகள் விட்டு வளர ஆரம்பித்த விடுவதால், கொழுந்து கிள்ளத் தேவையில்லை. 4-ம் மாதத்தில் பூ எடுக்க ஆரம்பித்து, 5-ம் மாதத்தில் இருந்து பிஞ்சுகளாக மாறி, 6-ம் மாதத்தில் காய்கள் அறுவடைக்குத் தயாராகும். அதிலிருந்து சுமார் 6 மாதங்களுக்குத் தொடர்ந்து அறுவடை செய்யலாம். ஒரு மரத்தில் இருந்து, 200 முதல் 300 காய்கள் கிடைக்கும். ஒவ்வொரு காயும், ஒன்றரை முதல் மூன்று அடி நீளம் கொண்டதாக இருக்கும்.

### 30 சென்ட்... 50 ஆயிரம்!

ஒரு மரத்தில் 20 கிலோ முதல் 30 கிலோ வரை மகசூல் கிடைக்கும். 30 சென்ட் நிலத்திலுள்ள 100 மரத்திலும் சேர்த்து சராசரியாக 2 ஆயிரத்து 500 கிலோ முருங்கைக்காய் கிடைக்கிறது. ஒரு கிலோவிற்கு சராசரியாக விலை 20 ரூபாய் என்று விற்பனை செய்வதால் 50 ஆயிரம் ரூபாய் வருமானம் கிடைக்கிறது. இதில் 15 ஆயிரம் ரூபாய் செலவு என்று வைத்துக் கொண்டாலும் 35 ஆயிரம் ரூபாய் லாபம் என்றார்.

---

**தொடர்புக்கு**

**பொன்னுசாமி, செல்போன் : 9865638120**

***ஆதாரம்: பசுமை விகடன் வெளியீடு 25.10.13 www.vikatan.com***